


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்ட ஆதி திராவிடர் நலத் துறை சார்பில் மனிதநேய வார விழா ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோட்டு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், துணை மேயர் வே.செல்வராஜ், ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# குன்னம், வேப்பூர் ஊராட்சியில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர்,பிப்,5–

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதியில், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெரிய வெண்மணி, புதுவேட்டக்குடி, காடூர், துங்கபுரம், காரைப்பாடி, வயலப்பாடி, கீழபெரம்பலூர், வசிஷ்டபுரம், கிழுமத்தூர், வேப்பூர், வரகூர், அந்தூர், குன்னம், பெரியம்மாபாளையம், மூங்கில்பாடி, அகூர், எழுமூர், சித்தளி, பேரளி ஆகிய ஊராட்சிகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ.12 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையின் அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன் தரும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மக்களின் தேவைகளை அறிந்து திட்டங்களை வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடி முதலமைச்சராக திகழ்ந்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய, அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு பொதுமக்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு திட்டங்களின் மூலம் பல்வேறு மக்கள் நலத்திட்ட பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வேப்பூர் அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெருந்தலைவர் காமராஜர் திட்டத்தின் கீழ் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 13 வகுப்பறை கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டும் பணி மற்றும் பெரிய வெண்மணி, புதுவேட்டக்குடி, காடூர், துங்கபுரம், வயலப்பாடி, கீழபெரம்பலூர், வசிஷ்டபுரம், கிழுமத்தூர், வேப்பூர், வரகூர், அந்தூர், குன்னம், பெரியம்மாபாளையம், மூங்கில்பாடி, அகூர், எழுமூர், சித்தளி, பேரளி ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் – கிராம ஊராட்சி பொதுநிதி, ஊராட்சி ஒன்றிய பொதுநிதி, 15 வது நிதிக்குழு மானியம், மாநில நிதிக்குழு மானியம், கனிமம் மற்றும் சுரங்கங்கள் நிதி, நம்ம ஊரு நம்ம அரசு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகள், தனிநபர் இல்ல குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள், கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணிகள், சாலைகள் பலப்படுத்தும் பணிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்புப் பணிகள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மோட்டார் மற்றும் பிற வேலைகள் வழங்குதல் பணி, புதிய ஆழ்துளை கிணறு நீர் மூழ்கி மோட்டார் மற்றும் குழாய்கள் அமைக்கும் பணி, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிகள், பாலம் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிகள், வேப்பூர், அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13 வகுப்பறை கொண்ட கூடுதல் கட்டிடம் கட்டும் பணி, நூலகம் அமைக்கும் பணி, தார் சாலை அமைக்கும் பணிகள், மயான கொட்டகை அமைக்கும் பணி, சித்தளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளிக்கு சுற்றுச்சுவர், சிலாப் மற்றும் பேவர் பிளாக் அமைக்கும் பணி, கவர்சிலாப் அமைக்கும் பணி, கைபம்பு அமைக்கும் பணி, சாலை பராமரிப்பு பணிகள் என மொத்தம் ரூ.11.34 கோடி மதிப்பீட்டில் 86 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பணிகள் அனைத்தும் விரைவில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பெரிய வெண்மணி, துங்கபுரம், காரைப்பாடி, வேப்பூர், குன்னம் ஆகிய ஊராட்சிகளில் தலா ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 பேருந்து நிழற்குடை மற்றும் புதுவேட்டக்குடி, காடூர், கீழவீரமநல்லூர், வயலப்பாடி ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட ஆட்சியரின் பொது நிதியின் மூலம் தலா ரூ.9.15 மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 4 குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் என மொத்தம் ரூ.66.60 லட்சம் மதிப்பீட்டில் 10 பணிகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

இன்று மட்டும் ரூ.12 கோடி மதிப்புள்ள திட்டங்கள் மக்களுக்காக செயல்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.


இதில்,மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சு.தேவநாதன், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ரம்யா, உதவி பொறியாளர் கவின்குமார், வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சேகர், அறிவழகன், குன்னம் வட்டாட்சியர் சின்னதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் அமைதி ஊர்வலமும், கலைஞர் அறிவாலயம் மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள அண்ணா திருவுருவ சிலைக்கு மாவட்டச் செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆர். வைத்திலிங்கம், டி.கே.ஜி.நீலமேகம், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன் உள்ளிட்ட மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள்,தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னோடிகள் பங்கேற்று நினைவு அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிக்கொண்டல் மா.செங்குட்டுவன்
### பிப்ரவரி 5 (2021)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரிடம் அணுக்கமாக இருந்து அரிய முறையில் தமிழ் எழுத்துப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட நாளில், அதன் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற 150 பேரில் ஒருவரும் – தன் இறுதி மூச்சு வரை கழகத்தின் உறுதியான உடன்பிறப்புகளில் ஒருவராக விளங்கியவர்.

71 ஆண்டுகளுக்கும் மேலாக முழுநேரமும் பத்திரிகைப் பணியில் ஈடுபட்டு, நல்ல தமிழ்ச் சொற்களை நடைமுறைக்கு கொண்டு வந்த தமிழகத்தின் மூத்த பத்திரிகையாளராக விளங்கியதுடன், கழக ஏடுகளான 'மாலைமணி', 'நம்நாடு', 'கழகக்குரல்' உள்ளிட்ட பல்வேறு ஏடுகளில் பணியாற்றியதுடன், முதலில் 'கவிக்கொண்டல்' என்றும் பின்னர், 'மீண்டும் கவிக்கொண்டல்' என்றும் தொடர்ந்து 32 ஆண்டுகள் அவ்விதழை நடத்தியவர். 15க்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

மவுண்ட்ரோடு போஸ்ட் ஆபீஸ் என்ற பெயரை 'அண்ணாசாலை அஞ்சல் அலுவலகம்' என்று பெயர் மாற்றிட காரணமாக இருந்தவர்.

2018ஆம் ஆண்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தலைமைக் கழகத்தின் சார்பில் "பேராசிரியர் விருது" வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சி, முன்னாள் ஒன்றிய செயலாளர், பி.எஸ்.எஸ்.சையத்இப்ராஹீம் மற்றும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் கருப்பன் மாரியப்பகவுண்டர் ஆகியோர் நினைவிடத்தில்,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் மற்றும் கழக கொள்கை பரப்புச் செயலாளர், முனைவர்.சபாபதிமோகன் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.உடன் எம்வீடி.கோபால், முனியப்பன், பி.கே.அன்பழகன், சூடப்பட்டி.சுப்ரமணி, முருகன், பி.கே.முரளி, டி.சந்திரசேகர் மற்றும் ஏராளமான தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் தொகுதியில் சீரணி அரங்கம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

*திருச்சி, பிப். 5-*

திருவெறும்பூர் ஒன்றியம் நவல்பட்டு ஊராட்சி பகுதி அண்ணா நகர் மைதாதனத்தில் சீரணி அரங்கம் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஊராட்சி பொதுநிதி 2025-2026 ஆம் ஆண்டு ரூ 9.42000 நிதியில் அமைக்கப்பட்டதை திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான முனைவர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார் . மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் சண்முகம், கயல்விழி, சுதாகர், பொதுமக்கள் நேதாஜி இளைஞர் இயக்கத்தைச் சார்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழக பள்ளி கல்வி துறை அமைச்சர் அன்பின் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

தமிழக முதல்வரின் அறிக்கை தி.மு.க.வின் அறிக்கை அல்ல ஒட்டு மொத்த தமிழர்களின் அறிக்கை அது என்னவென்றால் ஏமாற்றம் ஏமாற்றம் ஏமாற்றம்

ஒட்டுமொத்த இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலத்திலும் இருந்து வாங்கக் கூடிய வரி பகிர்வில் இருந்து 41 சதவீதம் தான் திரும்பத் தருகின்றனர்.

அதை பார்க்கும் பொழுது மாவட்ட வாரியாக ஒரு சதவீதம் 2 சதவீதம் ,3 சதவீதம், 10 சதவீதம் என பிரித்து கொடுக்கிறோம்.

மாநிலங்களிலிருந்து பெறப்படும் வரி பகிர்வை 50 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும் என 16வது நிதி குழுவில் செய்ய வேண்டுமென வலியுறுத்தி இருந்தோம் ஆனால் மீண்டும் 41 சதவீதம் தான் என அறிவித்து உள்ளனர்.

தமிழகத்திற்கான வரி பகிர்வு 5 ஆண்டுகளுக்கு 4.097 தான் கிடைக்கும்.

நமது துணை முதல்வர் சொல்வார் நாம் ஒரு ரூபாய் வரியாக செலுத்தினால் 29பைசா தான் அவர்கள் நமக்கு திரும்ப செலுத்துகிறார்கள் என்று இதையெல்லாம் பார்க்கும் பொழுது நமக்கு வரவேண்டிய வருவாயில் 5000 கோடி குறையும்.

எனது பள்ளி கல்வித்துறைக்கு ரூ3548 கோடி ரூபாய் வரவேண்டும் ஆனால் முன்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டு கையெழுத்து இட்டால்தான் தருவேன் என கூறுகிறார்கள்

ஒட்டுமொத்தமாக ஜல் ஜீவன் திட்டத்தை தமிழகத்தில் தான் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறோம் என பாராட்டு பெற்றுள்ளோம் ஆனால் அதற்கு வழங்க வேண்டிய ரூ 3112 கோடியை இக வரை வழங்கவில்லை இப்படி எல்லா திட்டத்திலும் பணம் நமக்கு வருவதில்லை இப்பவாவது கொடுப்பவர்களாக என பார்த்தால் அதுவும் இல்லை.

வழக்கமாக பட்ஜெட் தாக்கல் செய்யும் போது வாசிக்கும் திருக்குறளும் வாசிக்கப்படவில்லை நமக்கு நிதியும் அது போல் கொடுக்க மாட்டார்கள் அதை தான் நம் தமிழக முதல்வர் கவலையுடனும் கண்டிப்புடனும் செய்து உள்ளார் அதுதான் எனது நிலைப்பாடு என்றார்.





திருச்சியில் பேரறிஞர் அண்ணாவின் 57 வது நினைவு நாளை முன்னிட்டு சத்திரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவருவச் சிலைக்கும் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள பேரறிஞரின் திருவுருவச் சிலைக்கும் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி தலைமையில் மாநகரச் செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன் முன்னிலையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர் நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் சவுந்தர பாண்டியன், பழனியாண்டி, முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, பொருளாளர் துரைராஜ் மாவட்ட துணை செயலாளர்கள் முத்துச்செல்வம் , விஜயா ஜெயராஜ் பகுதி செயலாளர்கள் கமல் முஸ்தபா, ராம்குமார், நாகராஜ், இளங்கோ, கனகராஜ் , தொமுச குணசேகர்மற்றும் கழக நிர்வாகிகள் குமரவேல், வழக்கறிஞர் அந்தோணி, கவுன்சிலர் கலைச்செல்வி, பவுல்ராஜ், தொண்டரணி அமைப்பாளர் மதனா, ராதாகிருஷ்ணன், முத்து பழனி, உத்தமர் சீலி ராஜேந்திரன், தஸ்தா, பாலமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

<u>கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்</u>

# குத்தாலம் பி.கல்யாணம் சகோதரர் பி.சந்திரசேகரன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

*மயிலாடுதுறை பிப். 5-*

மயிலாடுதுறை மாவட்டம் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் சகோதரரும் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் க.அன்பழகன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் க.அறிவுச் செல்வன் ஆகியோரின் சிறிய தந்தையுமான சின்னபிள்ளை [எ] பி.சந்திரசேகரன் நேற்று முன்தினம் (03.02.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருத்துகிறோம்.

மறைந்த பி.சந்திரசேகரனுக்கு மனைவி சி.உமா மகன்கள் சி.வினோத், சி அஸ்வின் ஆகியோர் உள்ளனர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (04.02.2026) மாலை 03.00 மணிக்கு நடைபெற்றது.

குத்தாலம் திருவேள்விக்குடியில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்ட பி.சந்திர சேகரன் உடலுக்கு கழக நிர்வாகிகள், கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

## 13–ம் ஆண்டு
# நினைவு அஞ்சலி

" கலைஞர் விருது பெற்ற "

மத்திய, மாநில அரசு நல்ஆசிரியர் விருது பெற்ற



தோற்றம் : 08.04.1920 மறைவு : 05.02.2013

திருமதி

**பொற்செல்விஇளமுருகு**

...என்றும் நினைவில் வாழும்...

**பெ.ஆனந்த்குமார்** B.Com., Ex.M.C.,

கரூர் மாவட்ட துணை அமைப்பாளர், தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி